**ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, வேலூர் மாவட்டம்**
**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 720/மாஒ4/ஒபக/2024–25, நாள். 06.05.2024.**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – 2023–24ஆம் கல்வியாண்டு – பள்ளி செல்லாக் குழந்தைகள் "தொடர்ந்து கற்போம்" – என்ற முன்னோடி திட்டம் – அனைத்து அரசுப் பள்ளிகளில் மார்ச் 2024–ல் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்விற்கு வருகை புரியாத மாணவர்கள் மற்றும் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி நடத்துதல் மற்றும் துணைத் தேர்வில் பங்கேற்க செய்தல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை : பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் மாநில திட்ட இயக்குநரின் இணை செயல்முறைகள் கடித ந.க. எண் 1587/C7/OoSC/2024, நாள் 23.04.2024

**********

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் மாநில திட்ட இயக்குநர் அவர்களின் இணை செயல்முறைகளின்படி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ், 6–18 வயதுடைய பள்ளி செல்லா / இடைநின்ற (மாற்றுத் திறனுடைய குழந்தைகள் மற்றும் இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் - உட்பட) மற்றும் இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள குழந்தைகளை (Potential Dropout) கண்டறிந்து மீள பள்ளிக்கு வரவழைப்பதற்கான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பள்ளிக்கு சேர்க்கப்படாத அல்லது பள்ளிக்கு வருகைபுரியாத குழந்தைகள், பள்ளிக்கு வெளியே இருக்கும் குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர். அத்தகைய குழந்தைகளை அடையாளம் கண்டு தரமான கல்வியை வழங்குவது இடைநிற்றலுக்கான முக்கிய அளவுகோல் ஆகும்.

அதேபோன்று மார்ச் 2024ஆம் ஆண்டு பொது தேர்வில் தேர்ச்சி பெறாத பொதுத் தேர்விற்கு வருகை புரியாத 10ஆம் வகுப்பு மாணவர்கள் மற்றும் பள்ளிக்கல்வியினை பாதியில் கைவிடும் மாணவர்கள் இனம் கண்டு அவர்களுக்கு தேவையான உதவிகளையும் சிறப்புப் பயிற்சிகளையும் வழங்கி தொடர்ந்து பள்ளிக் கல்வியினை தொடர செய்வதும் பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான திட்டக் கூறுகளில் ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி "தொடர்ந்து கற்போம்" என்ற ஒரு முன்னோடி திட்டத்தினை வடிவமைத்து அதனை அரசுப் பள்ளிகளில் செயல்படுத்த திட்ட ஏற்பளிப்புக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மார்ச் 2024 ஆம் ஆண்டின் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்வில் வருகை புரியாத மாணவர்கள் அனைவருக்கும் உரிய குறைந்த பட்ச கற்றல் கையேடு (MLM) மற்றும் வினாத்தாள் விநியோகித்து அவர்களின் வருகை மற்றும்

வாராந்திர தேர்வு மதிப்பீட்டு முன்னேற்ற அறிக்கையை கல்வி மேலாண்மை தகவல் மையம் (EMIS) மூலம் பெற்று முறையாக கண்காணிக்கப்பட வேண்டியது அவசியம் என்று உணர்ந்து சிலமுக்கிய செயல்பாடுகளுக்கான முன்திட்டமிடல் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பள்ளி அளவில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களுக்கு அந்தந்த உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு இத்திட்டம், தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட முதல் துணைத் தேர்வு நடைபெறும் நாள் வரை சிறப்பு பயிற்சி வகுப்புகள் மற்றும் வாராந்திர தேர்வுகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் :-

- பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களைக் கண்டறிந்து அவர்களைத் துணைத்தேர்விற்கு விண்ணப்பிக்கச் செய்வது, தொடர்ந்து பயிற்சி வகுப்புகளில் மாணவர்களை பங்குபெறச் செய்வது மற்றும் விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் பொதுத்தேர்வு எழுதி மேற்கொண்டு கல்வியினை தொடரச் செய்வதை உறுதி செய்தல்

பள்ளித் தலைமையாசிரியர் பணிகள் :-

- ஒவ்வொரு தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் தேர்விற்கு வருகைபுரியாத தேர்ச்சி பெறாத, மாணவர்களின் விவரங்களை சேகரித்து வைக்கப்பட வேண்டும்.
- அனைத்து மாணவர்களையும் சிறப்பு பயிற்சி மையத்திற்கு வருகை புரிவதற்கு பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், வகுப்பு ஆசிரியர்கள், கல்வி தன்னார்வலர்கள் மூலம் மாணவர்களின் வீட்டிற்கு சென்று மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், தேர்வு சார்ந்த விழிப்புணர்வு முக்கியத்துவத்தை வழங்கி பயிற்சி மையத்திற்கு வருகை புரிய செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- குறைந்தபட்ச கற்றல் கையேட்டினை பயன்படுத்தி பாட ஆசிரியர்கள் பாடம் நடத்துவதையும் வாராந்திர சிறு தேர்வு நடத்துவதையும் வகுப்பு ஆசிரியர்களுக்கு தெளிவாக விளக்கி கூறி இதற்காக பாடத்திட்ட கால அட்டவணை தயார்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.
- மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி மையத்திற்கு வருகைபுரிந்து, துணைத் தேர்வு எழுதி தேர்ச்சி பெறுவதற்கான நடவடிக்கைகளையும், தேர்ச்சி பெற்றபிறகு, மாணவரை அடுத்த வகுப்பினை தொடர்ந்து கற்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் வருகையினையும், வாராந்திர தேர்வு மதிப்பெண்களையும் கல்வி மேலாண்மை தகவல் மையம் (EMIS) தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- பொதுத்தேர்வு எழுதாத மற்றும் தேர்ச்சி பெறாத அனைத்து மாணவர்களும் சிறப்பு பயிற்சி மையத்திற்கு வருகை புரிவதையும் பயிற்சி பெறுவதையும் ஊக்குவிக்க வேண்டும்,

- மாணவர்கள் வருவதை தினந்தோறும் கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும். வருகைபுரியாத போது அதற்கான காரணங்கள் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையானவற்றை தம்மால் இயன்றதை செய்து மறுநாள் வரவழைக்க வகுப்பு ஆசிரியர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- மையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தருவது அவசியமாகும்.
- பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்களை துணைத் தேர்வு எழுத ஊக்குவித்து வழிகாட்டுதல் வேண்டும்.
- ஆசிரியர்கள் தெரிவு, மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை தேவைகள், சிறப்பு பயிற்சி மைய செயல்பாடுகள், துணைத் தேர்வு எழுத ஊக்குவித்து வழிகாட்டுதல் போன்ற செயல்பாடுகளை பள்ளித் தலைமையாசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் பணிகள்

- சம்பந்தப்பட்ட பள்ளி ஆசிரியர் பயிற்றுநர்கள் தேர்விற்கு வருகை புரியாத தேர்ச்சி பெறாத மாணவர்களை பள்ளித் தலைமையாசிரியர், மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், வகுப்பு ஆசிரியர்கள் மூலம் மாணவர்களின் வீட்டிற்கு நேரடியாக சென்று சிறப்பு பயிற்சி வகுப்பிற்கு வருவதற்கு விழிப்புணர்வு வழங்க பள்ளிகளுக்கு உதவி செய்தல் வேண்டும்.
- மாவட்ட அலுவலகத்திலிருந்து மாணவர்களுக்கு வழங்கக்கூடிய குறைந்தபட்ச கற்றல் கையேடு (MLMs) மற்றும் வினாத்தாள் மாணவர்களுக்கு சென்றடைந்ததை உறுதி செய்ய வேண்டும்.
- பயிற்சி நடைபெறும் நாட்களில் சம்பந்தப்பட்ட பள்ளிக்கு ஒரு பார்வையாளராக சென்று பள்ளியில் நடக்கும் சிறப்பு பயிற்சி வகுப்புகளை பார்வையிடுதல் வேண்டும்.
- இம்மாணவர்களுக்கு வாராந்திர தேர்வுகளை (நான்கு வாரங்கள்) பாட ஆசிரியர்களைக் கொண்டு நடத்துவதையும், மதிப்பெண் விவரங்களையும் தலைமையாசிரியர்களிடமிருந்து பெற்று கல்வி மேலாண்மை தகவல் மையத்தில் (EMIS) பதிவு செய்வதை உறுதி செய்தல் வேண்டும்.

மேலும், மார்ச் 2024ஆம் கல்வியாண்டில், 10ஆம் வகுப்பு அரசு பொது தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் வருகை புரியாத மாணவர்கள் அனைவரும் அரசு தேர்வுத் துறையின் வாயிலாக நடத்தப்படும் துணை தேர்விற்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் "தொடர்ந்து கற்போம்" என்ற முன்னோடி திட்டத்தில் கலந்து கொண்டு பயனடைய செய்யவும் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில்

இத்திட்டத்தில் சிறப்பு வகுப்புகள் எடுக்கும் ஆசிரியர்கள் மற்றும் சார்ந்த வகுப்பாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கி, இத்திட்டத்தின் செயல்பாடுகளுக்கு குறைந்த கால அளவு உள்ளதால், இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். எனவே எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் விரைந்து சிறப்பாக செயல்படுத்த வேண்டுமென தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வாரத்தில் இரண்டு நாட்கள் பயிற்சி மையத்தை பார்வையிட்டு செயல்பாடுகள் நடைபெறுவதை உறுதி செய்து, உரிய ஆலோசனைகள் வழங்கி வாராந்திர தேர்வுகள் நடைபெறுவதை பார்வையிட வேண்டும். இத்திட்டத்தின் அனைத்து நிகழ்வுகளையும் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மற்றும் மேற்பார்வையாளர் (பொ) ஆவணப்படுத்தி மாவட்டத் திட்ட அலுவலகத்தில் சமர்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

பெறுநர் –

1. அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்

நகல் –

1. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை 6
– அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை 6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.